**இந்து தமிழ் திசை (03.08.2023)**

### தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு

# டிஎன்பிஎல் சார்பில் ரூ.75 லட்சம் காசோலை

## அமைச்சர் உதயநிதியிடம் டிஆர்பி.ராஜா வழங்கினார்

● கரூர்

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்(டிஎன்பிஎல்) சார்பில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு ரூ.75 லட்சத்தை விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதியிடம், தொழில் துறை அமைச்சர் டிஆர்பி.ராஜா நேற்று வழங்கினார்.

விளையாட்டுப் போட்டிகளின் பயன்பாட்டுக்காக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ஊரகப் பகுதிகளில் விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிப்பதற்கு தேவையான பயிற்சிகளை வழங்குதல், தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகள், மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள், ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்பாளர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கும் பணிகள் உள்ளிட்டவற்றுக்காக முதல்வர், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை தொடங்கி வைத்துள்ளார்.



தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு ரூ.75 லட்சத்துக்கான காசோலையை விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதியிடம் நேற்று வழங்கிய தொழில் துறை அமைச்சர் டிஆர்பி.ராஜா.

தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தகத் துறையின் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக பொறுப்புடைமை செயல்பாடுகளின்(சிஎஸ்ஆர் பண்ட்) கீழ் விளையாட்டுப் போட்டிகளை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு ரூ.75 லட்சத்துக்கான காசோலையை மாநில இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம், மாநில தொழில் துறை அமைச்சர் டிஆர்பி.ராஜா நேற்று வழங்கினார்.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலர் ச.கிருஷ்ணன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன கூடுதல் தலைமைச் செயலரும், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருமான மு.சாய்குமார், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

# மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்


**MAALAI MALAR**

திருச்சி 3-8-2023 (வியாழக்கிழமை) 10 பக்கம் ₹ 6 ★

TRICHY 3-8-2023 (THURSDAY) 10 PAGES ₹6

மலர் 46 இதழ் 231

VOL: 46 ISSUE: 231

புகளூர் காகித நிறுவனம் சார்பில் விளையாட்டு போட்டிகளை மேம்படுத்துவதற்காக ரூ.75 லட்சத்திற்கான காசோலையை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதியநிதி ஸ்டாலினிடம் தொழில் துறை அமைச்சர் டிஆர்பி ராஜா வழங்கிய போது எடுத்த படம்.

### விளையாட்டு போட்டிகளை மேம்படுத்துவதற்காக

# புகளூர் காகித நிறுவனம் சார்பில் ரூ.75 லட்சம்

## அமைச்சர் உதயநிதியிடம் வழங்கப்பட்டது

வேலாயுதம்பாளையம், ஆக.3—

விளையாட்டு போட்டிகளின் பயன்பாட்டிற்காக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஊரக பகுதிகளில் விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிப்பதற்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதற்காகவும், தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு போட்டிகள், மாற்றுத்திற னாளி களுக்கான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஒலிம்பிக் போட்டிகள் பங்கேற்பாளர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதற்காகவும் தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறையின் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சமூகபொறுப்புடைமை செயல்பாடு களின் கீழ் விளையாட்டு போட்டிகளை மேம்படுத்துவதற்காக ரூ 75 லட்சத்திற்கான காசோலையை தமிழக முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்ட தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமை ச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கினார்.

நிகழ்ச்சியில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கிருஷ்ணன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமை செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் முனைவர் சாய்குமார், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையக் குழு உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அரியலூரில் பிரதம மந்திரி கல்வி

அரியலூர் மாவட்ட கலெ
வெளியிட்டுள்ள செய்தி குறி
அரியலூர் மாவட்டத்தில், 
தொகை திட்டத்தில் பய
பிற்படுத்தப்பட்டோர்,
பின்தங்கியவர்கள், சீர்மரபின
9, 10 ஆம் வகுப்பு பயிலும் மா
ஆயிரமும், 11, 12 ஆம் வகுப்
ரூ.1 லட்சத்து 25 ஆயிரமு
வழங்கப்படுகிறது.
அரியலூர் மாவட்டத்தை
இணையதள முகவரியில்
பள்ளிகளில் 9 அல்லது 11 ஆம்
இருக்க வேண்டும். விண்ண
அல்லது பாதுகாவலர்களின்
லட்சத்து 50 ஆயிரத்துக்கு மி
விண்ணப்பிப்பதற்கான க
தேதி ஆகும். விண்ணப்பங்க
ஆகஸ்ட் 12 –ம் தேதி முதல்
அவகாசம் வழங்கப்பட்டுள்ள
இதற்கான எழுத்து தேர்வு
தேதி நடைபெறுகிறது.
செயல்பாட்டில் இருக்கும் செ
ஆதார் இணைக்கப்பட்ட வங்
சான்றிதழ், சாதி சான்றிதழ்
விண்ணப்பிக்க வேண்டும்.



ஆசிரியர் பணி திறன் மேம்பா
எடுத்தபடம்.

## முசிறியில் ஆசிரியர் பணி


முசிறி அரசு ஆண்கள் மேல்
கல்வியியல் ஆராய்ச்சி ம
ஆகியவற்றின் சார்பில் ஆசிரி
பயிற்சி நடைபெற்றது. பயி
கல்வி மற்றும் பயிற்சி நிறு
தலைமை தாங்கினார். ஆ
பெற்றோர்கள் வரவேற்றன

தினகரன் (05.08.2023)

## தமிழகத்தில் விளையாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்த

# டிஎன்பிஎல் சார்பில் ரூ.75 லட்சம் நிதி

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் வழங்கல்



தமிழ்நாட்டில் விளையாட்டு உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, புகழூரில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் (டிஎன்பிஎல்) சார்பில், தமிழக விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, ரூ.75 லட்சத்துக்கான காசோலையை வழங்கினார்.

வேலாயுதம்பாளையம், ஆக. 5: கரூர் மாவட்டம், புகழூரில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் (டிஎன்பிஎல்) சார்பில், தமிழ்நாட்டில் விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, ரூ.75 லட்சம் நிதியை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதியநிதி ஸ்டாலினிடம், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அரிய முயற்சியின் காரணமாக தொழில்துறையை பொறுத்தவரையில் இந்திய அளவில் மட்டுமின்றி உலக அளவிலான கவனத்தையும் தமிழ்நாடு மிகவும் ஈர்த்துள்ளது. இந்த ஆண்டு விளையாட்டு போட்டிகளின் பயன்பாட்டிற்காக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, ஊரக பகுதிகளில் விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிப்பதற்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதற்காக, தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு போட்டிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள், ஒலிம்பிக் போட்டிகள் பங்கேற்பாளர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதற்காக, தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறையின், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமூக பொறுப்புடைமை செயல்பாடுகளின் கீழ் விளையாட்டு போட்டிகளை மேம்படுத்த ரூ.75 லட்சம் காசோலையை, தமிழக முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்ட, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கினார்.

சென்னையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கிருஷ்ணன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமை செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன கூடுதல் தலைமைச் செயலாளர், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சாய்குமார், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையக் குழு உறுப்பினர் செயலர் மேகநாதரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தினமலர் (06.08.2023)



விளையாட்டு போட்டிகளை மேம்படுத்துவதற்காக புகழூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் சார்பில் ரூ.75 லட்சத்துக்கான காசோலையை விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதியிடம் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா வழங்கினார். அருகில் டிஎன்பிஎல் தலைவர் சாய்குமார்.

## விளையாட்டு போட்டிகள் மேம்பாட்டுக்கு ரூ.75 லட்சம்

### புகழூர் டிஎன்பிஎல் வழங்கல்

**வேலாயுதம்பாளையம், ஆக. 6–**

புகழூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவன சமூக பொறுப்புடைமை செயல்பாடுகளின் கீழ் விளையாட்டு போட்டிகளை மேம்படுத்துவதற்காக ரூ.75 லட்சம் நிதியை அமைச்சர் உதயநிதியிடம் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா வழங்கினார்.

விளையாட்டு போட்டிகளின் பயன்பாட்டிற்காகவும், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு போட்டிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகள் மற்றும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்பாளர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதற்காகவும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சமூக பொறுப்புடைமை செயல்பாடுகளின் கீழ் ரூ.75 லட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதியிடம் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கினார். தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கிருஷ்ணன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவன தலைவர் சாய்குமார், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையக் குழு உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.